ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

தர்மமே தரணியாரைக் கார்க்கின்றது. எல்லாவற்றுக்கும் அடிப்படையாயிருந்துகொண்டு எல்லாவற்றையும் தாங்கி நிற்கின்றது. அதில்லாமற்போனால் ஒன்றும் நிலைத்திருக்க முடியாது.

கேள்வி:—அங்ஙனமாயின் அத்தகைய தர்மத்தை அழிக்கத்தலையெடுத்தவர்கள் நிலைத்திருக்கிறார்களே.

பதில்:—நிலைத்திருப்பதென்றால் மூச்சுவிட்டுக்கொண்டிருப்பதும், பேசிக்கொண்டிருப்பதுமல்ல. துருத்தியினுள்ளும் காற்று போய் வந்துகொண்டிருக்கிறது. கிராமபோன் என்ற யந்திரமும் பேசிக்கொண்டிருக்கிறது. அதனால் அவை நிலைத்தவையாய்விடுமா? துருத்திதோல் நாளடைவில் மக்கி மடிந்து விடுகின்றது. கிராமபோனும் கெட்டுப் போகிறது. அதுபோல் தர்மத்தையழிக்கத் தலையெடுத்தவன் மறுபிறப்பில் மேலானபதவியையடைய வழியில்லாமல் மடிந்துபோகிறானென செய்யாமொழி சொல்லுகின்றது. ஆகவே அவன் நீடித்து நிலைப்பதில்லை.

கேள்வி:— நீடித்து நிலைப்பதென்றால் எப்படி?

பதில்:—தற்காலமிருக்கும் ஸ்திதிக்குக்குறையாமல் முக்திவரையுள்ள மேன்மையையடைய முயன்றால் நீடித்து நிலைப்பவனாவான். தாழ்ந்தஸ்திதியையடைபவன் நிலைபெறமாட்டான். புல், பூண்டு, புழு முதலிய பிராணிகள் சிலகாலம் சரீரம்பெற்று ஜீவித்திருப்பினும் நிலைத்ததாகக் கருதப்படுவதில்லை. ஆகவே தர்மத்தைத் தழுவி நின்றால் நீடித்து நிலைத்திருக்கலாம்.

கேள்வி:— செய்யாமொழியெனச் செப்பியவேதம் சிலர்சேர்ந்து சுயநலத்தைப்பாராட்டிச் செய்ததாகக் கருதப்படுகின்றதே. அப்படியிருக்க அது எப்படி செய்யப்படாததாகும்.

பதில்:—பொதுவாகச் சப்தமெனப்படுவது செய்யப்பட்டதா? செய்யப்படாததா? என்று விசாரித்தால் அது அனாதியென்றும், நித்தியமென்றும், வியாபகமென்றும் தெரியவரும். அப்படியிருக்கையில் சப்தவிசேஷமாகிய வேதம் செய்யாமொழியெனச்செப்புவதில் எவ்வித ஆக்ஷேபணையும் செய்யமுடியாது

கேள்வி:—எல்லா வேதபாகங்களும் ஓரேவிதவஸ்துவை போதிக்கின்றனவா?

பதில்:—ப்ரம்மவஸ்து ஒன்றையே ஸர்வவேதங்களும் போதிக்கின்றன. ஆனால் அந்தவஸ்துவையறிய ஸாதனங்களைவிதித்துபரம்பரையாய் முடிவில் அஃதொன்றையே போதிக்கின்றன. ஆகையால் அந்த நிலைபெறுவதற்குப் பாத்திரமாகக்கிடைத்த பிராமணப்பிறப்பைப் பாழாக அடிக்காமல் வேதம் விதித்தபடி தர்மத்தையனுஷ்டித்து சிரேயஸ்ஸை அடைவீராக. சுபம்.

பத்திராதிபர்.

## 6-மங்களம்.

மங்களமென்பது ஆறுவது ஆத்தும குணமாகும். அதன்
சொரூபத்தை பிருஹஸ்பதிபகவான்—

**प्रशस्ताचरणं नित्य मप्रशस्तविवर्जनम् ।**
**एतद्धि मङ्गलं प्रोक्तं मुनिभिस्तत्त्वदर्शिभिः ॥**

"நித்தியமாக சிறந்ததையே செய்வதும், அப்படி இல்லாததை
விடுவதும், இவையல்லவா தத்துவம் கண்டறிந்த முனிவர்களால்
மங்களமெனக் கூறப்பட்டது" என்று கூறுகின்றார். பெரும்
பாலும் பிராணிகள் தாம் செய்வதெல்லாம் சிறந்ததென்றும்,
இழிவான கார்யத்தை நாமொருபொழுதும் செய்யமாட்டோ
மென்றும் அபிமானங்கொண்டிருப்பார்கள், இது தப்பான கார்ய
மென்று தெரிந்துகொண்டே எவரேனும் செய்யத் துணிவாரா?
என்றும் சொல்லுவார்கள். ஆனால் இவர்கள் நினைத்தது சரியா
வென்று கவனிப்போமானால் சரியென்றே கூறமுடியவில்லை.
பிறர்பொருளை அபகரிப்பவன், பிறரை நிந்திப்பவன், பெரியோ
ரிடம் பழிசுமத்துபவன், பிறர் மாதரைப் புணரவிரும்புபவன்,
பரஹிம்சை செய்பவன் முதலியவர்கள் தான்செய்யும்கார்யம்
கெட்டதென்று நினைப்பார்களா? நினைத்திருந்தால் செய்வார்களா?
அவர்கள் செய்துவிட்டபடியால் அவை சிறந்தவையாய்விடுமா?
ஆகவே அவர்களது நினைவு சரியான நினைவென்று எண்ணமுடிய
வில்லை. அதுவும் நல்ல நினைவென்றால் அப்படி நல்ல நினைவோடு
அவன் செய்த தீயதொழிலைத்தெரிந்துகொண்ட ராஜாங்கத்தார்
அதற்காக அவனைத் தண்டிப்பது உசிதமாகுமா? எல்லோரும்
எப்பொழுதும் செய்துவிடும் எல்லாக்காரியமும் ஒழுங்கானதா
கவே இருந்துவிடுமானால் ஆக்ஞாசக்தியடைந்து தண்டனாதிகாரம்
பெற்ற அரசர்களின் அரசாக்ஷி தொண்டுதொட்டு பரம்பரையாயி

ருக்கவேண்டியது அனுவசியமாய்விடுமல்லவா? ஆகையால் எல்லாரும் நினைப்பது சரியென்றே ஆகாது. காமக்குரோதாதிகளுக்கு வசப்பட்டு விடும்பொழுது எல்லோருடைய மனதும் கெடுதலையடைந்துவிடும். அதனுல் அவர்களின் நினைப்பு கெட்டதாய் விடும். கெடுதலேயும் நல்லதென்றே அவர்கள் நினைக்கக்கூடும். அப்படி நினைப்பதே கெடுதலாகும். அந்த விடத்தில் கெட்டது நல்லது என்பவைகளைப்பிரித்து கெட்டதைக்கண்டித்து நல்லதை நடத்திவைக்கவல்லவா சிக்ஷைசெய்யச் சக்திபெற்ற அரசாங்கத்தார் ஏற்படுத்தப்பட்டிருக்கிறுர்கள். இதுபோல் ஆசார்யனுக்கு மந்த அதிகாரமுண்டு. ஆசார்யனும் தன்னடிபணிந்து நன்மையை நாடிவந்த நல்ல சிஷ்யனைச் சிக்ஷித்து கெடுதலை செய்யவிடாமல் நல்லதையே நடத்தும்படி கட்டளையிடுவார். சாஸ்திரத்துக்கும் இந்த அதிகாரமிருக்கிறது. சாஸ்திரமும் சிறந்தவைகளை விதித்து மற்றவைகளை விலக்குகின்றது. மனிதனைவிட அதிகமான ஞானம் ஐசுவர்யம்முதலியவைகளையடைந்த தேவர்களும் தம்மையுபாஸிக்கும் உபாஸகர்களுக்கு அஹிதத்தை விலக்கி ஹிதத்தை உபதேசிப்பார்கள். ஸர்வ சக்தனும், ஸர்வக்ஞனுமான பரமேசுவரன் பக்தர் விஷயத்தில் கருணையடைந்து சாஸ்திரவாயிலாகக் கார்யாகார்யங்களை போதித்து நல்வழிநடக்க கட்டளையிடுவார். ஆகவே ஸர்வேசுவரனை பரமேசுவரனும், அவனது ஆக்ஞாரூபங்களான சுருஸ்மிருதி புராணேதிகாஸாதிகளான சாஸ்திரங்களும், அவைகளைச் சற்குருமுகமாகச் சரிவரக்கற்றுணர்ந்து ஆசார்யபதவிக்கு வந்த ஸதாசார்யனும் சொல்வது சிறந்ததாகுமேயன்றி தோன்றியதெல்லாம் சிறந்ததாய் விடமாட்டாது. அதுபோல் அவர்கள் சொல்லுவதிலிருந்துதான் இன்னது கெட்டது என்று தெரிந்துகொள்ளவேண்டும், ஸாமான்யமாக மனிதர் புத்திக்கு நல்லது கெட்டதாகத்தோன்றிவிடும். கெட்டது நல்லதாய்த் தோன்றிவிடும். அதைக்கொண்டு மாத்திரம் உடனே செய்துவிடக்கூடாது. இவ்வாறு தோன்றியது சரியா? பெரியோரும் சம்மதிப்பாரா—என்று தீர்க்காலோசனைசெய்து நடத்தமுயலவேண்டும். காமாதிகளுக்கிடுபட்டுக் கண்டதைச் செய்துவிட்டுப் பின்னிட்டுக் கஷ்டப்படக்கூடாது. இதையே ஸ்ரீபகவான்கீதையில்—

इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत् तौह्यस्य परिपन्थिनौ ॥

"ஒவ்வொரு இந்திரிய விஷயந்தோறும் ராகம், (விருப்பு) த்வேஷம் (வெறுப்பு) இவைகள் நன்கு நிலைத்திருக்கின்றன. அவைகளின் வசமாய் விடக்கூடாது. சிரேயஸ்ஸை விரும்பியவனுக்கு அவைகள் சத்துருக்கள்" என்று உபதேசித்தார். ஆகையால் சாஸ்திரத்தில் சிறந்தாக விதிக்கப்படுவதைத்தான் செய்யவேண்டும். எப்பொழுதும் செய்யவேண்டும். அதுபோல் சாஸ்திரத்தில் நிஷேதிக்கப்பட்டிருப்பதை விலக்கிவிடவேண்டும். ஏதோ ஒரு ஸமயம் விலக்கிவிட்டால்மாத்திரம்போதாது. எப்பொழுதுமே விலக்கிவிடவேண்டும். இதுதான் தத்துவமுணர்ந்த முனிவர்களான முன்னோர் மொழிந்த மங்களம். இதுவே முக்கியமான முத்திநெறி. இதன்படியே நடந்து எல்லோரும் சிரேயஸ்ஸை அடைவார்களாக.

பத்திராதிபர்.

## ஓர் கண்டனக்கூட்டம்.

1. மைசூர்ராஜதானியிலுள்ள ஸ்ரீமத் அபிநவ சங்கராலயத்தில் 22-9-30-ல் பிராம்மணர்களின் ஸபை ஒன்று கூட்டவேண்டுமென்று பிர்மஸ்ரீ வேதரத்னம் வைதிக சிகாமணி அய்யாகனபாடிகள். 1, இனும்தாரும் டிஸ்டிரிக்ட்போர்டு மெம்பருமான M. K. கிருஷ்ணராயர் 2, பிர்ம்மஸ்ரீ பண்டித சதாசிவ சாஸ்திரி 3, ஆஸ்தான மஹா வித்வான் பிர்ம்மஸ்ரீ மோடஹள்ளி ராமசேஷ சாஸ்திரி 4, அட்வகேட் மகா-ள-ள-ஸ்ரீ பாலஹள்ளி சீதாராமய்யர் 5, மகா-ள-ள-ஸ்ரீ நஞ்சங்கூடு V. ரங்கண்ணு 6, மகா-ள-ள-ஸ்ரீ M. வெங்கிடகிருஷ்ணய்யர் 7, இவர்களின் கையொப்பமிட பத்திரிகைகள் 18—9—30 யன்று வெளியிடப்பட்டன.

2. இதற்கிணங்கி கூடின ஸபையில் ஆஸ்தான மஹாவித்வான் பிரம்மஸ்ரீ M. ராமசேஷ சாஸ்திரி பிரேரேபித்து ஆஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீ கான கானஹள்ளி நாராயண சாஸ்திரிகள் முதலியவர்கள் ஆமோதித்து பிரம்மஸ்ரீ வேதரத்ன வைதிக சிகாமணி அய்யாகனபாடிகள் அவர்கள் ஸபாத்யக்ஷராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3. ஸபாத்யக்ஷருடைய ஆக்ஞையின்கீழ் நன்ஜன்கூடு மகா-ள-ள-ஸ்ரீ V. ரங்கண்ணு தனக்கும் ஸ்ரீ உத்திராதி மடத்தின்

ஸ்வாமிகள் அவர்களுக்கும் நடந்த "அத்வைதமதம் அவைதிகம்" என்றது முதலானதுபோலுள்ள விஷயங்கள் அடங்கிய கடிதங்களை ஸபையில்வாசித்தார்.

4. இவ்வாருன விஷயங்கள் தேசகால வர்த்தமானங்களுக்கு விரோதமாயும், அநுசிதமாயும், அயோக்யமாயும் உள்ளது என்ற விஷயத்தை ஸ்தாபிக்க.

1. பிரம்மஸ்ரீ M. ராமசேஷ சாஸ்திரிகள் அவர்கள்.
2. ,, கானகானஹள்ளி நாராயணசாஸ்திரிகளவர்கள்
3. ,, ஸாம்ப சாஸ்திரிகள் அவர்கள்.
4. ,, சாமராஜநகரம் ஸித்தாந்தி தம்மைய்ய சாஸ்திரிகள் அவர்கள்
5. ,, சதாசிவ சாஸ்திரிகள் அவர்கள்.
6. ,, மஹாமஹோபாத்யாய தர்மாதிகாரி விருபாக்ஷ சாஸ்திரிகள் அவர்கள்.
7. ,, B. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள்.
8. ,, கோபால சாஸ்திரிகள் அவர்கள்.
9. மகா-ா-ா-ஸ்ரீ டிஸ்டிரிக்ட் ஜட்ஜு M. சங்கரநாராயணய்யர் அவர்கள்.
10. ,, அட்வகேட் நரசிம்மய்யர் அவர்கள்.
11. ,, M. வெங்கிடகிருஷ்ணய்யர் அவர்கள்.
12. ,, மைசூர் ஸ்பெஷல் கோர்ட்டுகிளார்க் ராகவேந்திரராவ் அவர்கள்.

இவர்கள் யுக்தியுடன் பேசினுர்கள்.

5. பிறகு ஸபையில் ஸபாத்யக்ஷரின் பிரேரபணையின் பேரில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் அவர்கள் எழுதியுள்ள "அத்வைதமதம் அவைதிகம்" என்றதுமுதலிய சப்தங்களை சாஸ்திர விசாரமன்னியில் கேவலம் லௌகிக ஞானத்தினுல்மாத்திரம் விசாரிக்கத்தன்மை உள்ளவர்களுக்குங்கூட ஜிகுப்ஸையை உண்டு பண்ணுவதோடுங்கூட மதபேதமன்னியில் பொதுவாக பிராம்மணர்களுக்கே பரிஹரிக்க முடியாதபடிக்கு மகத்தான விபத்து நேர்ந்திருக்கும் இச்சமயத்தில் இவ்வித சப்தங்களைக் குறித்து விசாரிப்பதே ஸர்வ மதத்தாருக்கும் ஏளனத்திற்கு இடமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. இதனால் நமக்கு உண்டாயிருக்கும் மனோவேகத்தை பரதகண்டத்தில் எல்லாப்பிரதேசங்களிலும் உள்ள அத்வைத பண்டிதர்களின் மூலமாய் ஆங்காங்குள்ள மஹாஜனங்களுக்கு தெரியப்படுத்தவேண்டுமென்றும்.

3. பரதகண்டத்திலுள்ள 19 அத்வைத மடாதிபதிகளுக்கு "அத்வைதமதம் அவைதிகம்" என்பதை ஒப்புவீர்களா? வைதிகம் என்று ஸ்தாபிக்கமுடியுமா? அப்படிமுடியுமானால் ஸ்தாபிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யவேண்டியது என்று பிரார்த்தனை அனுப்பி சீக்கிரத்தில் உத்திரவு ஆகவேண்டுமென்றும்,

4. இந்த மேல்கண்ட தீர்மானங்களை அவச்யமான இதர பாஷைகளிலும் மொழிபெயர்த்து அந்தந்த பாஷையில் அச்சிட்டு பிரசுரம் பண்ணப்படவேண்டுமென்றும்.

5. மேல்கண்ட தீர்மானங்களின்படி கார்யங்களைநடத்த கீழ்க்கண்டவர்களை கார்யதர்சிகளாகவும், மெம்பர்களாகவும் ஏற்படுத்திஸந்தர்ப்பத்திற்கேற்றவாறு உப ஸபைமெம்பர்களின் கூட்டத்தை ஜாஸ்தியோ, கம்மியோபண்ண இந்த ஸபைக்கு அதி காரம் உண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஸபாத்யக்ஷர்.

பிர்ம்மஸ்ரீ வேதரத்ன வைதிகசிகாமணி அய்யா கனபாடிகள் அவர்கள்.

கார்யதரிசிகள்.

மகா-ள-ள-ஸ்ரீ அட்வகேட் பாலஹள்ளி ஸீதாராமய்யரவர்கள்
,, நஞ்சன்கூடு V. ரங்கண்ணா [B. A., B. L.

மெம்பர்கள்.

1. பிர்ம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய தர்மாதிகாரிவிருபாக்ஷ சாஸ்திரிகள் அவர்கள்.
2. ,, ஆஸ்தான மஹாவித்தான் மோடிகான ஹள்ளி ராமசேஷ சாஸ்திரிகள் அவர்கள்,
3. ,, B. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள்.
4. ,, கன்னம்பாடி கோபால கிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள்.
5. ,, கானகானஹள்ளி நாராயண சாஸ்திரிகள் அவர்கள்.

6. ,, ஆஸ்தானவித்வான் சதாசிவ சாஸ்திரிகளவர்கள்.
7. ,, சாம்ப சாஸ்திரிகள் அவர்கள்.
8. மகா-ா-ா-ஸ்ரீ M. வெங்கிடகிருஷ்ணய்யர் அவர்கள்.
9. ,, அட்வகேட் C நரஸிம்மய்யா அவர்கள் B.A.B L.
10, ,, டிஸ்ரிக்டுபோர்டு மெம்பரும் இனாம்தாருமான
M. K. கிருஷ்ணாராவ் அவர்கள்.

மைசூர்.
22—9—30.

(ஒப்பம்) அய்யாகனபாடி,
ஸபாத்தியக்ஷர்.

---

# இது சரியா?

---

சின்னாட்களுக்குமுன் த்வைதாசார்யர்களான உத்திராதி மடம் ஸ்வாமிகளவர்கள் அத்வைதமதம் அவைதிகமென்று மைசூரில் ஓர் வாக்கை விடுத்தனரென்றும் அச்சமயம் நன்ஜன்கூடிலிருக்கும் ஆஸ்திக சிரேஷ்டரான ரங்கண்ணா என்பவர் இவ்விதம் கூறியது சரியாவென்பதை நிரூபிக்கவேண்டுமென்று மைசூரில் ஓர் சபை நடத்துவதாய் ஆசார்யாவர்கட்கு விக்ஞாபனபத்திரிகை அனுப்பியதில் நான் அவ்விதம் கூறவில்லை. அத்வைத விஷயமாய் பிரமாணமாய் எடுத்துக்கொள்ளும் சுருதி வாக்கியங்களிற் பல சந்தேகங்கள் நிகழ்கின்றன. அது விஷயத்தைப்பற்றி நிரூபிக்க எச்சபையிலும்தயாராய் இருக்கிறேமெனக் கூறியதாயும் மித்திரன் பத்திரிகை மூலம் வெளியாய் இருந்தது. ஆனால் த்வைதாசார்யாரவர்கள் கூறியவார்த்தை எதுவாயினும் அத்வைத மதம் அவைதிகமெனப் பகர்ந்தனரென்ற வார்த்தைதான் அது முதல் உலகிற்பாவி க ட்டுத் தீபோல் ஆஸ்திகர்களது மனதை வாட்டுகிறது. சமீபத்தில் அவ்வாச்சார்யாரவர்கள் கும்பகோணத்தில் விஜயம் செய்திருப்பதாயும் ஆங்கு இப்பிரஸ்தாபம் நிகழ்ந்ததாயும் அதற்கு அவர்கள்தாம்ஸபைகூட்டுவது தத்வவிசாரம்செய்வதற்கு மாத்திரமேயன்றி வேறு யாதொரு எண்ணமும் கொண்டல்லவென்று அத்வைதிகளான சில லௌகிக பிரபுகளிடத்தில் உறுதிமொழி கூறியதாயும் 12—3—31-ல் வெளியான நம் ஆர்ய தர்ம பத்திரிகையில் காணப்படுகிறது. த்வைதாசார்யார்கள் அத்

வைதம் அவைதிகம் என்ற பதத்தில் அவைதிகம் என்றால் வேதத்தில் அத்வைதமதம் சொல்லப்படவில்லை என்று பொருள் என்றும் சங்கராசார்யாரவர்கள் த்வைதமதம் அவைதிகமென்று சொல்லி இருக்கிறார்கள். அதுபோல் இது என்று அர்த்தமேற்படுமேதவிர வேறொன்றுமில்லை என்றும் நமக்குத்தத்வவிசாரமேபிரதானமென்றும் அத்வைதிகளோடு எப்போதும் எங்களுக்குநெருங்கியபழக்கமுண்டென்றும் கூறியபிறகு வந்திருந்த அத்வைதி லௌகிகர்கள் மனமகிழ்ந்து சென்றார்களென்றும் நம் பத்திரிகையில் கண்டேன். இது எவ்விதமாயினுமாகுக. இவ்விஷயத்தில் இதைமட்டிலும் பொதுவாய்க் கூறுகின்றேன்.

அநாதிகாலமாய் நம் இந்தியாவில் பற்பல மதங்கள் பிரகாசித்துக்கொண்டு வருகின்றன. அவை ஒன்றுக்கொன்று பேதமுள்ளவையாயினும் அதனால் பரஸ்பர விரோதம் ஒருவரும் கொண்டாடினதாயும் வாதப்போரும் அதன்பிறகு உயிர்ப்போரும் நடந்ததாயும் நம் சரித்திர மூலமாய்த் தெரியவில்லை. அக்காலத்தில் ஆஸ்திக ஷண்மதங்களும் நாஸ்திகஷண்மதங்களும் அவைகளை அனுஷ்டிப்போரும் பலர் ஒன்றுபட்டு வாழ்ந்திருக்கின்றனர். ஒன்றுபட்டென்றால் இப்போது பெரியவர்களாய் விளங்கிக்கொண்டு இந்தியாவைத்தூக்கி நிலைநிறுத்த முன்நிற்பவர்கள் கொண்டுள்ள கருத்தல்ல. மற்று ஒருவருக்கொருவர் ஸ்வஸ்வ மதங்களைச் சரிவர நடத்திக்கொண்டு பொது கார்யங்களில் எவ்விதம் சேர்ந்துகொள்ளவேண்டுமோ அவ்விதம் சேர்ந்தனரென்று பொருள். ஸ்ரீமத் ராமாயணத்தில் தசரதர் தமது வார்த்தக தசையில் ஸ்ரீராமனுக்கு இளையரசு பட்டம்கட்டவேண்டி எல்லோரையும் தருவித்தனரென்ற விடத்தில் இது விளக்கமாய்த்தெரிகிறது. ஆனால் அவ்வம்மதங்கள் தன் நிலையோடு நிற்காமல் ததும்பி இதரமதங்களை ஆக்கிரமிக்கவாரம்பித்தால் அப்போதெம்மதத்தை நிலை நிறுத்தினால் மற்றவை தன்னுடன் நிற்குமோ அம்மதாசார்யார் அச்சமயம் உதிப்பாரென்பது உண்மை இதை ஒட்டியே ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாரவர்கள் அவதரிக்கும் காரணத்தைக் கூற ஆரம்பிக்கும்போது—

कलिना बलिना खिलेऽखिलेऽपि स्खलिते श्रौतपथेऽपथे प्रवृद्धे ।
जपहोमतपस्सु नामशेषेष्वपि यातेषु सुभाषितेषु शोषम् ॥

जिनबुद्धकपालिशक्तिवह्नीन्द्रिनसेवासु समन्ततः श्रितासु ।
शिथिले द्विजवेदवेदिवादे प्रथिते चाद्वयवेदबाह्यमोदे ॥

கலியின் கொடுமையால் ஸமஸ்தவேதங்களும் அவைகளின் மார்க்கங்களும் அழிந்து ஜபம் ஹோமம் தபஸ் இவைகள் பெயரோடு மட்டிலும் நின்று நல்ல வசனங்களற்று ஜைனமதம், புத்தமதம் கபாலிமதம், சக்திமதம் அக்னி சந்திரன் இவர்களின் உபாஸனையும் ஓங்கி பிராமணர்கள் வேதங்கள் அவற்றை அண்டினவர்களுக்கு அபாயமும் அத்வைத வாதத்தின் விரோதபாவமும் கிளம்பிய காலத்தில் அவதார புருஷனில்லாது பயனில்லையென்று கருதி ஆசார்யாவதரித்தனரென்றும் அவர்கள் துர்மதக் கண்டனங்களைச்செய்து ஸன்மதங்களை ஸ்தாபித்தனரென்றும் இதனால்தான் இம்மகானுக்கு ஷண்மதஸ்தாபனாசார்யரென்றும் இன்னும் பெயர்வழங்கி வருகிறதென்பது யாவருமறிந்ததே. அதன்பிறகு ஓர் அவசியமான காலத்தில் ஸ்ரீ ராமானுஜாசார்யரும் பிறகு ஸ்ரீ மத்வாசாரியரும் அவதரித்ததாய்த்தான் ஒப்புக்கொண்டிருக்கிறோம். இதனால் இவ்வாச்சார்யர்கள் அவ்வம்மதத்தைச் சீர்படுத்தி முன்போல் நிலைநிறுத்தினரென்றுதான் கொள்ளுகிறோமேயன்றி அவர்கள் அவ்வம்மதத்தை உத்பத்தி செய்தனரென்று ஒரு ஆஸ்திகரும் ஏற்பதில்லை. அவைதிக மதத்திற்கும் வைதிக மதத்திற்கும் ஓர் சமயத்தில் வாதம் நடந்திருந்தாலும் வைதிகமதத்தில் அவ்விதம் வாதம்செய்து ஒருவரையொருவர் ஜயித்தாரென்றாவது தோற்றாரென்றாவது காணவில்லை. ஆனால் தன்தன் மதம் நிலைபெறுவதற்காகத் தமது ஸித்தாந்தங்களில் இதரமதங்களைக் கண்டித்தெழுதியிருக்கின்றன! இது ஒவ்வொருவரும் சண்டைசெய்துகொள்வதற்காகவல்ல. அவ்வம்மதஸ்தர்கள் ஸ்வஸ்வமதத்தில் விசேஷப்பற்றுப்பெற்று அதனுள்ளடங்கவேதான். இதுதான் சுருதி சம்மதம். பதினெண்புராணமெழுதிய வியாஸாசார்யார் பற்பலதேவதைகளைப் புகழுமிடத்து அந்தந்த தேவதைகளைத்தான் முதல் தைவமென்றும் மற்றவை அந்த தைவத்தின் அம்சமெனவும் கூறியிருக்கிறார். இதனால் வியாஸர் தத்வம் தெரியாமல் தவித்தலைந்தாரெனவாகொள்வோம். இல்லை இல்லை. உபாஸகனது மன நிலைமைக்குத் தக்கவாறு அவனவன் அவ்வப்புராணத்தைப்பார்த்து அகமகிழட்டுமே என்பதுதான்

அவாது கருத்து. இதை ஒட்டியேதான் நம் மும்மதாசார்யார்களும் தம் சீடர்கள் க்ஷேமம் உய்யுமாறு தம் ஸ்தானத்தில் பரம்பரையை ஏற்படுத்தி அவர்களுக்கு நல்லுபதேசம் புரியுமாறு கருணை புரிந்தனர். அவ்விதபரம்பரையில் வீற்றிருப்பவர்கள்தான் தற்காலத்திலிருக்கும் ஸ்ரீ உத்தராதிமடாசார்யாரும் இத்தகைய இவர்கள் புதிதாய் இப்போது தத்வவிசாரம் செய்யப்புகுந்தது புதிய வழியாய் இருக்கிறதே என்பதுதான் இங்கு வருந்தத்தக்கதாய் இருக்கிறது. நம் ஆசார்ய பரம்பரையில் தத்வ விசாரமென்றால் அவ்வம்மதஸ்தர்களை வைத்துக்கொண்டு ஸ்வஸ்வமத ஸித்தாந்தத்தை நிர்த்தாரணம் செய்துகொள்வதுதான் வழக்கம், இப்போது அத்வைதமதாசார்யர்களாய் வீற்றிருக்கும் மூர்த்திகள் ஸந்நிதானத்தில் த்வைதவிசிஷ்டாத்வைத பண்டிதர்கள் வந்தால் அவர்களை வாக்யார்த்தம் நடத்தச்செய்து விசேஷமான விடங்களில் இவ்விடத்தில் எமது ஆசார்யாவர்களின் ஸித்தாந்தம் இவ்விதம் இது த்வைதிகளின் ஸித்தாந்தம்,இது அத்வைதிகளின் ஸித்தாந்தம்,இது விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தமென்றே கூறுவார்கள். அதைக்கேட்டு புன்னகைகொண்டு அவரவர்களுக்குத் தக்கபடி ஸன்மானமளிக்கின்றனரேயன்றி என்மதத்திற்குவிரோதமான ஸித்தாந்தம் சொன்னாரென்று பேதம் கொள்வதேயில்லை. இவ்விதம் தத்வவிசாரம் செய்வதையே நாம் விசிஷ்டாத்வைதாசார்யாவர்கள் ஸந்நிதியிலும் காண்கிறோம். இவ்விதமிருக்க நம் த்வைதாசார்யர் அவர்கள் இவ்வித தத்வவிசாரம் செய்வது ஸரியாகுமா? ஒரு ஸமயம் அத்வைதமதம் வேதப்பிராமாணமற்றதாகவே இருக்கட்டும். ஆயினும்

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ।
जोषयेत्सर्वकर्माणि विद्वान् युक्तस्समाचरन् ।

என்ற கீதாவசனப்படி இவர்கள் அம்மதஸ்தரைப் புண்படுத்திப் பிறகு தைலம் போடுவதுபோல் அதற்கு அர்த்தம் அதல்ல, இது என்று சமயம்போற் கூறவும் வேண்டுமோ.நம் இந்தியாவில் ஸ்வாராஜ்யமென்று பறையடித்துக் கூத்தாடும் பெரியாரென்பவர்கள் இந்தியாவில் இந்துமதம் அழியவேண்டுமென்றும் வர்ணாசிரமதர்மம் தொலைந்தாலொழிய க்ஷேமமேற்படாதென்றும் கூறிக்கொண்டிருக்கும்போது

परैः परिभवे प्राप्ते वयं पञ्चोत्तरं शतम् ।
स्वजनस्य विरोधे हि वयं पञ्चैव ते शतम् ॥

பிறரால் நமக்கு இழிவு ஏற்படுமானல் அப்போது கௌரவவம்சத்தவர்களான நாம் 105பெயர்கள் என்று ஒன்றுபடவேண்டும். நமக்குள் விரோதமேற்பட்டால் நாம் ஐவர்தான். அவர்கள் 100 பெயர்களென்று தர்மபுத்திரர் கூறியவாறு மதத்திற்கும் வர்ணாச்ரமதர்மத்திற்கும் பரமகஷ்டம் ஏற்பட்டு தயங்கி விழிக்கும் இக்காலத்தில் மதத்திரயஆசார்யர்களும் இக்காலத்தில் ஒன்றுபட்டுப் பொதுவான வர்ணாச்ரமதர்மத்தைக்காப்பாற்ற அதிசீக்கிரம் முன் வந்து காப்பாற்றி ஸ்வஸ்வமதஸித்தாந்தங்களை ஆனந்தமாய் தன் கோஷ்டிகளில் சர்ச்சை செய்யவேண்டியிருக்க இவர்கள் நம் உள்ளே பேதகல்பனம் செய்து தத்வவிசாரம் செய்யவாரம்பித்தால் நம் சத்துருக்களாய் இருப்பவர்களைக் கூவியழைப்பதாய் ஆகாதா. இது சரியா? இக்கால தர்மத்தைப்பார்த்து மனம் சகியாத ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளவர்கள் சென்றவருடத்திற்கு முந்தி ஓர் யோஜனைசெய்து எல்லா மதாசார்யர்களும் இக்காலத்தில் ஒன்றுபட்டு எல்லோரும் ஏராளமாய் பணஉதவிபுரிந்து நம்மததர்மத்தை நிலை நிறுத்துவதற்காக ஓர் பொதுப் பத்திரிகை ஆரம்பிப்போமென்று தீர்மானித்து அவ்விதமே ஒவ்வொரு மதாசார்யர்களுடைய சம்மதியையுமறிந்து வானமாமலை ஆசார்யர்களிடம்போய் இச்செய்தியைக் கூறிவரும்படி அடியேனை ஹைதராபாத்தில் வீற்றிருந்த அவர்களிடம் அனுப்ப ஆக்ஞைசெய்தனர். அவ்விதமே அடியேன்போய் கூறியதில் எவ்வளவு வேண்டுமென்று அவர்கள் அவ்வப்போது வெளியிடுகின்றனரோ அவ்வளவு தருகிறேமென்று ஆக்ஞாபித்தனர். அவ்விதமே அஹோபிலம் ஆசார்யர்களும் ஏற்றிருந்தனர். அதுபோல் இம்மகானிடமும் என்னை அனுப்புவதாயும் ஆனல் இவர்கள் இருப்பிடம் தெரியாததால் அனுப்ப முடியாமலும் நின்றுவிட்டது. அக்காலத்தில் இவ்வாச்சார்யாவர்களும் இதை ஒப்புக்கொண்டிருந்ததாய்த்தான் கேள்வி. அத்தகைய இம்மகான் மிகக்கற்றறிந்தவராயினும் இக்காலத்திற்கு அழகற்ற இவ்வசனத்தை வெளியிட்டது காலதோஷம்தானென்று கொள்ளவேண்டுமேயொழிய வேறல்ல உண்மையில் ஓர் மதஸ்தர் இன்னொரு மதஸ்தரோடு போர்புரிவது அழகாகாது. அதனுல் குரோதமும் கஷ்டமும்தான் நமக்கு

விளையுமென்பது யாவருக்கும் தெரிந்ததுதான். ஆகவே ஸ்ரீஉத்திராதி மடம் ஆசார்யாவர்களை அடிபணிந்து கேட்டுக்கொள்வது இதுதான்— தத்வவிசாரத்தை இனி இவ்விதம் நடத்தாமல் எம்மதஸ்தரையும் கண்டுகளித்து அவரவர்களது பரிசிரமத்தை அறிந்து அவரவர்களின் யோக்கியதைக்குத் தக்கவாறு நல்லுபதேசம்செய்து அக்ஞர்களான எங்களை நல்லவழியில் விசேஷமாய் திருப்பிவர்ணாச்ரம தர்மத்தை நிலைநிருத்திக் காப்பாற்றவேண்டுமென்பதே.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

## ஓர் அறிவிப்பு.

---

15—3—31.

12--3-1931-ல் பிரசுரிக்கப்பட்ட ஆர்யதர்மத்தில் பண்டிட் R. V. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் உத்திராதிமடம் ஸ்வாமிகள் தன்னிடம் தெரிவித்ததாக அத்வைதிகள் வைதிகர்களே நாஸ்திகர்களல்லர் எனக்கூறி ஆனால் அத்வைதமதமவைதிகமே. அதனால் அத்வைதிகள் வருந்துமாறு ஸ்வாமிகள் ஒன்றும் கூறிவிடவில்லை என ஸமாஸப் படுத்துகிறார்கள். அத்வைதமதம் அவைதிகமாம். அதைத்தழுவிய அத்வைதிகள் வைதிகர்களாம். என்னவிந்தை. மேலும் அத்வைதிகளின் சார்பாக தத்வவிசாரம் செய்யவே ஸ்வாமிகள் விரும்புகிறாரென கூறுகிறார்கள். தத்வவிசாரம், விஷயம் தெரிந்துகொள்ளவா? அல்லது வாதம்புரியவா? முதல் விஷயமானது ஒரு மதத்தின் பிரவர்த்தகர் மற்றொரு மதத்தின் ஸ்வரூபத்தை அறியவிரும்புவது பொருந்தாதது. இருப்பின் முறைப்படி அறிய முயலவேண்டும் அது நடைபெறக்கூடிய விஷயமல்ல. ஆதலின் தத்வவிசாரம் வாதத்தில்தான் முடிவடைகிறது. அதற்கு பொதுவான ஸ்தலங்களில் தக்க பண்டிதர்களை மத்தியஸ்தர்களாகக்கொண்டு வாதம் நடத்தல்வேண்டும். மைசூர் முதலியவிடங்களிலும் ஆஸ்தான பண்டிதர்கள் பொதுஸ்தலங்களில் இது விஷயமாக கட்டாயம் வாதம் நடத்தியே தீரவேண்டுமென தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது. அத்வைதம் அவைதிகமேயென்று சொல்லுபவர்கள் விசிஷ்டாத்வைதம் அவைதிகமென என் சொல்லத் துணியமாட்டார். இதனால்

உண்டாகுமவமதிப்பு அத்வைதிகளுக்கும் விசிஷ்டாத்வைதிக ளுக்குமொன்றே. ஏனெனில் ப்ரும்மஸ்வரூபத்திலும் மோக்ஷத்தி லும் ஸாதனங்களிலும் பேதம் த்வைதிகளுக்கும் விசிஷ்டாத் வைதிகளுக்கும்பலஉளதே. விஷ்ணுபக்திபானது அத்வைதிகளுக் கும்பொதுவே த்வைதமதத்தில் அத்வைதிகள் சொல்லும் ஆக்ஷே பணைகளுக்கு த்வைதிகள் ஸமாதானம்சொல்லத்தயாராய் இருக்கி ருர்களா? அப்படியிருந்தால் பொது ஸ்தலத்தில் தகுந்த மத்யஸ் தத்துடன் பரஸ்பர மதப்பிரவேச சமயபந்தத்துடன் ஜல்ப கதையை ஆரம்பிக்க அத்வைதிகள் தயாராய் இருக்கிறுர்கள் என்பதை எல்லாரும் அறியலாம். ஹிந்து,முஸ்லீம், பார்ப்பனர் அல்லாதார், கருப்பர், வெள்ளையர் என பற்பல சண்டைகள் தாண்டவமாடும். இக்காலத்தில் பிராம்மணர்களுள் இவ்விதம் மதபேதத்தைக் கிளப்பி அதன்மூலம் ஒருவருக்கொருவர் கசப் புத்தன்மையை ஏற்படுத்த முயன்றது கலியின் கூற்றே. எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

T. N. சுப்பிரமணியசாஸ்திரி.

---

# தத்வ விசார மார்க்கம்.

## 16—3—31.

சில வருஷங்களுக்குமுன் நிகழ்ந்துவந்த ஹிந்துமுஸ்லீம் முதலிய மதச்சண்டைகள் நீங்கியும், பிராமணர், பிராமணால்லா தார்போன்ற வகுப்புச்சண்டைகள் மறைந்தும், தேசியப்போரை யொத்த தர்மயுத்தங்கள் ஓர் சமரசஎல்லைக்கு வந்துகொண்டும், ஆங்காங்கு சில மதாசாரியர்கள் தேசபக்தர்கள் முதலாயினேர் அவரவர்களாலான மார்க்கங்களில் சமரசத்தை நிலைநாட்ட முயற் சித்தும்வரும் இத்தருணத்திலே, பெரும்பேர்படைத்தநல்வழியை சிறப்புறப் பாதுகாக்கமுயற்சியாது தெரிந்தோ தெரியாமலோ தன்மாறு உறுதியாலோ பிறர் உபதேசமயக்கத்தாலோ நிலைதவறி அழகிய மறைபோர்வையணிந்து சமரசமுறைகளின் பாதைகளுக் குக் குறுக்கே உலாவிவருகின்றனர் ஒரு சிலர்.

இவர்களின் சேனைகளுக்கு அங்கத்தினர்களாக முன்னுக்குப் பின் முறண்படுவதாயும், தொடுத்த கருமத்திலே தீரமுடன் நிற்க வகையின்றி முன்வைத்த காலைப்பின்னெடுத்துவைத்து வேகமாய்

ஓடிடவும் சக்தியற்றவராய் பூர்வவாஸனையின் பலத்தால் 'அத்வைதம் அவைதிகம்' என்ற சப்தத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளத் தயங்கினவராய் குறுக்குவழியில் பாதிவிழிப்புடன் தெளிவற்ற சமாதானத்தைக் களங்கமனதுடன் கூறி, முதலில் எந்த சப்தத்திற்கு வருத்தம் தெரிவிக்க முயற்சிக்கப்பட்டதோ அதையே அடுத்தடுத்து மேகங்களின் இடையில் தோன்றும் மின்னலைப் போல் மறைத்து மறைத்து வெளியிடுகிறார்கள். ஆஹா என்ன சாமர்த்தியம் !

அத்வைதம் அவைதிகம் அல்லவாயின் அத்வைதம் வேதத்தில் சொல்லப்படாததாக எவ்விதம் ஆகுமோ? அத்வைதிகள் வைதிகர்களே என்று சொல்லி அத்வைதம் வேதத்தில் சொல்லப் படவில்லையென்று திரித்துக்கூறுவதும் பொருத்தமுடையதன்று.

வேண்டுமானால் பல்வேறு மதஸ்தர்கள் இயக்கங்கள் இவைகளைச் சார்ந்தவர்கள் அவரவர்களது மார்க்கங்களைச் சமாசமுறையில் உபதேசித்து பிரசாரம் செய்ய முற்படவேண்டுவதுபோல் த்வைதத்தின் மேன்மையையும் தத்வங்களையும் நேரான வழியிலே பிரசாரம் செய்வார்களாக.

கேவலமான பாவத்துடனே பிறர் மனம் புண்பட கர்வத்துடன் சப்தத்தை பரப்புதலும் வ்யங்கிய (புதைந்த கருத்துக்களுடன்) மரியாதைகளுடன் ஸமாதானம் கூறுதலும், அதிலும் கௌரவக்குறைவென மதித்து, ஒருவாறு திடமற்ற மார்க்கத்தின் நடுவே சட்டென நிற்பதும் விந்தையினும் விந்தையே.

தங்களுடைய முறைதவறிய ஸித்தாந்தத்தை (அத்வைதம் அவைதிகம் என்பதை) கம்பீரமாக ஸ்தாபிக்கவிரும்பினால் நேரடியான முறையிலே பொறுமையுடன் பொதுமண்டபத்திலே வந்து நின்று அறைகூவி அழைப்பார்களா? அல்லது அழகாக தங்கள் பாதையையனுஸரித்து பிறர் தத்வங்களைப் பேச்சிலும் எழுத்திலும் மனதிலும் இகழாமல் தூயமார்க்கத்தில் உபதேசம் செய்ய முற்படுவரோ?

மாறான பாட்டையை விட்டகன்று நேரான நடையிலே கலந்து சமரசஸன்மார்க்க உணர்ச்சியை திறம்பட விருத்தி செய்ய முயற்சிப்பரோ?

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓர் சமரசமதாபிமானியாகிய பாரதீபுதல்வர்.

# த்வைதாத்வைத விசாரஸபா கும்பகோணம்,

## 17—3—31

இனி நடக்கப்போகும் விசாரத்தின் ஸௌகரியத்துக்காக அடியில்கண்ட நியமங்கள் 17—3—31-ல் ஸபையில் கொண்டு வரப்பட்டு ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களாலும் ப்ரம்மஸ்ரீ ப்ரொபஸர் K. சுந்தரராமய்யர் அவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டன

1. பகவத்கீதை த்வைதத்தை தெரிவிக்கின்றதா? அல்லது அத்வைதத்தைத் தெரிவிக்கின்றதா? என்பது முதலில்விசாரிக்க வேண்டியவிஷயம்.

2. விசாரிக்கவேண்டிய விஷயத்தை தீர்மானிப்பதற்காக இருபக்ஷத்தாரும் தம்தம் மதத்துக்கு ஸாதகமாகவும் பிற மதத்துக்கு பாதகமாகவும் பேசவேண்டிய விஷயத்தை எழுத்துமூலமாகக்கொண்டுவரவேண்டும்.

3. இந்தவிசாரம் நடக்கும்பொழுது கீதாவாக்யத்தைத் தவிர வேறுயாதொரு வேதாந்த ப்ரமாணத்தையும் எடுத்துக் காட்டக்கூடாது. பதங்களுடைய அர்த்தங்களை நிச்சயிக்கும் பொழுதும் முடியுமானல் கீதாவாக்கியத்தையே மேற்கோளாகக் காட்டவேண்டும்.

4. த்வைதிகளையும் அத்வைதிகளையும் தவிர்த்து வேறு எவரும் விசாரகர்களாகவர இடம் கொடுக்கக்கூடாது.

5. முதல் தினம் விசாரிக்கப்பட்ட விஷயம் மறுதினம் விசாரம் ஆரம்பமாவதற்குமுன்பே அன்றன்று வ்யவஸ்தாபர்களாக ஏற்படுத்தப்பட்ட மூன்று மனுஷ்யர்களுள் ஒருவருடையவாவது கையெழுத்துடன் வெளிப்படுத்தவேண்டும். இவ்வாறு கையெழுத்துப்போடாமல் வெளிவரும் ஸபையின் நடவடிக்கை முறை நம்பத்தக்கதல்ல.

6. ப்ரம்ம ஸூத்திரம், உபநிஷத் இவைகளிலும் இம்மாதிரி விசாரம் செய்யப்படவேண்டும்.

7. பிறகு மூன்றையும்சேர்த்து இதே முறையில் பலாபல விசாரம் செய்யப்படவேண்டும்.

8. ஒவ்வொருநாளும் ஸாயங்காலம் $6\frac{1}{2}$மணிமுதல் $8\frac{1}{2}$மணி வரை விசாரம் நடைபெறவேண்டும்.

9. இந்தசபை தத்வவிசாரத்திற்காகவே நடைபெறுகிறது. சிரத்தையுடன் கேட்பவர்களின் மனதைத் தெளிவித்து ஸந்தோஷப்படுத்துவதுதான் இந்த சபையின் முக்கியமான நோக்கம். விசாரமும் மிக்க ஸஹோதரப்பான்மையிலேயே நடைபெறும்.

## தஞ்சை பிராமண மஹாஸபைக்கு விக்ஞாபனம்.

1. சரீரசிரமத்தையும் திரவியச் சிலவையும் பாராட்டாமல் பிராமணோத்தாரணத்திற்குப் பாடுபடும் கனதனவான்களுக்கும் பண்டிதசிரேஷ்டர்களுக்கும் கேவலம் वाचाधर्ममवाप्नुहि என்பதை மாத்திரம் செய்யக்கூடிய சிற்றறிவுள்ள நான் स्मारयेनतु शिक्षये என்றபடி பூர்வமாய்க்கொஞ்சம் எழுதத்துணிந்ததற்கு மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்.

2. புராணங்களில் கலியுகத்தில் வரவர பிராமண்யம் கெடும் என்றிருந்தாலும் இந்தயுகக் கடைசியில் உத்தாரணம் செய்யும் மஹான் பிராமணன் என்பதால் ஸரியான ஆஸ்திக பிராமணர்கள் எப்போதும் அவசியம் இருப்பார்களென்பது நிச்சயம். தர்மத்திற்குச் சுணக்கம் ஏற்படும் போதெல்லாம் தான் அவதரித்து நிலைநாட்டுவதாக பகவான் வாக்கு. ஆகையால் நம் உத்தாரணம் திண்ணமாய் ஏற்படும்.

3. ஆகையால் நாம் ஸரியானபடி முயற்சிக்கவேண்டியது அவசியம். சிலவருஷங்களாக அனேக இடங்களில் பிராமண மஹாஸபைகள் நடந்துவருகின்றன. நமக்கு ஸமீபத்தில் ஏற்பட்ட மத இடஞ்சல்களை நிவர்த்திக்க அவைகள் நடத்தப்படுவதால் அதற்குவேண்டியவரையில் மாத்திரமே கவனிக்கப்படுகின்றது. ஸபைகளில் பேசி தீர்மானிக்கப்படும் விஷயங்கள் பிறகு அமுலுக்குக்கொண்டு வரப்படுவதாகவும் தெரியவில்லை. இதுவரை நடந்த ஸபைகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் எவை அமுலுக்கு வரவில்லை அதற்குக் காரணம் என்னவென்பதை பரிசீலித்து தேவையுள்ளதைச் செய்யவேணும். நாஸ்திகமும் அனாசாரமும் சுளுவாகையால் ஆஸ்திகத்தைப் பாதிக்கும் விஷயங்கள்

தினே தினே அதிவேகமாய் விர்த்தியாகின்றனவென்பது நமக்குப் பிரத்திக்ஷம்.

4. இதைக்கொண்டு ஆஸ்திகத்திற்கு சாசுவதமான நிலைநாட்டுதலுக்குத் தேவையுள்ள ஏற்பாடுகளும் அத்யாவச்யமாகின்றன. பிராமணர்களின் கடமை. தர்மம் முதலியதுகளை நன்ருய் தெரிந்துகொண்டு நம்மையும் நம் குடும்பங்களையும் திருத்திக்கொள்ள வேணும். சிஷ்டாசாரப் பெரியோர்களிடமிருந்து தெரிந்துகொள்வதுதான் ஸரியானதாகும். ஸம்ஸ்கிருதம் வேதாத்தியானம் இவைகளின் அபிவிர்த்தி அவசியம்.

5. பிர்ம்மஸ்ரீ T.R ராமச்சந்திரய்யர் அவர்கள் சாஸ்திரோஜ்ஜீவினி என்று ஆரம்பிக்க முயற்சித்தார்கள். அந்த ஸம்பந்தமாய் ஸம்ஸ்கிருதம் வேதம் இவைகளை நாம் எல்லாரும் அப்பியஸிக்க வேண்டிய அவசியத்தையும் என் சிற்றறிவுக்குப்பட்ட வழிகளையும் கண்டு ஆங்கிலத்தில் அச்சிட்டு ஷை ஐயர் அவர்களுக்கும் ஸ்ரீமடாதிபதிகளுக்கும் சில பிரமுகர்களுக்கும் அனுப்பினேன். ஒரு நகல் இத்துடன் அனுப்பிக்கொண்டிருக்கிறேன். தயவு செய்து அதைப் பார்வையிட்டு உசிதம்போல் செய்யவேணும். அதில் கண்டபடி செய்யும்பக்ஷம் பண்டிதர்களுக்கு உற்சாகமும் நமக்கும் நம் குழந்தைகளுக்கும் நல்ல பழக்கங்களும் நல்ல வழியில் அபிவிருத்தியுமுண்டாகும். அதில் கண்டுள்ள பண்டிதர்கள் (teacher) எங்கும் வைதிக கார்யங்களுக்குப் போகாமலும் கிராமங்களில் நடக்கும் வியவஹாரங்கள் முதலியதுகளில் ஸம்பந்தப்படாமலும் படிப்பிக்கும் ஸமயங்களில் தவிர மைத்த காலங்களில் தங்கள் கிரஹத்திலேயே இருந்துகொண்டு பிராமணர்கள் எப்படி நடப்பது ஸரியென்பதை அனுஷ்டானத்தில் நடத்திக்காட்ட வேணும். நம் ஸ்வல்ப ஆயுளில் அனேக ஆசையும் அதினால் உண்டாகும் கவலைகளிலும் ஜோலிகளிலும் நம் தர்மம் முதலியதுகளைத் தெரிந்துகொண்டு அனுஷ்டித்து சிரேயஸ்ஸையடைய இது சுலபமானதும் அத்தியாவசியமானதுமானவழியென்று நினைக்கிறேன்.

6. ஸம்ஸ்கிருதம் வேதம் இவைகளினால் லௌகிகமாய் திருஷ்டபலன் இல்லையே என்று சிலர் சங்கிக்கலாம். இதற்குப் பெரியோர்கள் நிச்சயம் தக்கபதில் கொடுப்பார்கள். ஆங்கிலப் படிப்பினாலும் பலன் இல்லையென்பதும், நான் சொல்லியிருக்கும்

வழி ஆங்கிலப்படிப்பை இப்போது போல் துடா ஸௌகரியம் உள்ளதென்பதும், பாலியத்தில் ஸ்வல்பசிலவில் நல்லவழிகளும் ஆசாரங்களும் சிக்ஷைகளும் பழகி திடகாத்திரத்துடன் ஆஸ்தி கத்தை விருத்திசெய்யும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

7. இப்போதிய பள்ளிக்கூடங்களில் ஆஸ்திகப்படிப்பு நடக் கும்படியும் மஹாஸபைகள் ஏற்பாடு செய்யலாம்.

8. ஜாதிபேதம் கூடாதென்ற நவீனர்களின்தீவிரமுயற்சியை ஸரியாய் கண்டிக்கவேணும்.

9. புதிதாய் ஆஸ்திக பேப்பர் ஆரம்பிக்கத் தவக்கப்பட்டா லும் இப்போது நடந்துவரும் 'ஆர்யதர்மம்' 'Brahmin' 'ஆஸ்திக பிராமணன்' 'Dharmic Hindu' முதலிய ஸ்வல்பசந்தாவிலுள்ள பேப்பர்களை ஏராளமாய் ஆதரித்து அவைகளையும் விர்த்திசெய்து நாமும் க்ஷேமமடைய வேணும். அவைகளுக்குத்தான் ஸ்வல்ப சந்தாதாரர்கள் மாத்திரம் இருப்பது திருப்திகாமல்ல.

10. ஆஸ்திகஅபிவிர்த்திக்குத் தேவையுள்ளதெல்லாம் நிரந் தரமாய் நடக்கவேண்டியபடி செய்யவேணும்.

அபிமானி.

---

# வைராக்கியத்தின்விசேஷம்.

मोहं जहि महामृत्युं देहदारसुतादिषु ।
यं जित्वा मुनयो यान्ति तद्विष्णोः परमं पदम् ॥

இதனால் நமக்கு பரமகருணாநிதியான ஆசாரியாள் உபதேசித் திருக்கும் ஓர் அரிய பெரிய விஷயத்தை என் புத்திக்குப் புலப் பட்டவரையில் இங்கு எழுதத்துடங்கினேன்.

ஸகலமான பிராணிகளுக்கும் எவ்வித விதிவசனங்களன்றி தூலமான இந்த தேஹத்திலும் பெண்டீர்களிடத்திலும் மைந்தர்க ளிடத்திலும் வீடு வயல் முதலியவைகளிலும் தன்னுடையதெ ன்று அனாதிகாலமாக உண்டாயிருக்கும் பற்றுதலே உலகங்களை அழிக்கும் சாமர்த்தியமடைந்த இயமதர்மாஜனென்று சொல் லப்படுகிறது. அத்தகைய மிருத்யுவை அவசியம் ஜெயிக்க வேண்டும். அதை ஜெயித்தவுடன் முனியாகிறான். உடனே பா

மாத்ம பதமாகிய மோக்ஷத்தை அடைகிறான். இத்தகைய மிருத்தியுவை தேகாதிகளில் ஆசையை ஒழித்து ஜயிக்கவேண்டும். அப்படி ஒழிப்பதற்கு இவ்விதம் விசாரித்தல்வேண்டும்

श्लेष्मोद्गारि मुखं स्रवन्मलवती नासाश्रुमल्लोचनं
स्वेदस्रावि मलाभिपूर्णमभितो दुर्गन्धदुष्टं वपुः ।
अन्यद्वक्तुमशक्यमेव मनसा मन्तुं क्वचिन्नार्हति
स्त्रीरूपं कथमीदृशं सुमनसां पात्रीभवेन्नेत्रयोः ॥

கபத்தினால் நிறம்பிய முகமும் பெருகிக்கொண்டிருக்கும் மூக்கும் நீர்ததும்பிய கண்ணும்தேகத்துக்குள்நிறைந்த மலங்களால் வியர்வையுள்ளதும் அதனாலேயே துர்நாற்றமுடையதான சரீரமும் உள்ள இந்த ஸ்திரீ ரூபமானது நாவினாலுரைக்கமுடியாததும் மனதினால் நினைக்கவும் கூடாத துர்க்குணங்களுமுள்ள இந்த உருவம் புத்திசாலிகளுடைய கண்ணிற்கு பாத்திரமாகுமா? என்றபடி விஷயங்களில் தோஷத்தை கெவனிக்கவேண்டும். மற்றுமொரு சுலோகத்திலும்

गृहस्पृहा पादनिबद्धशृङ्खला कान्ता सुताशापटुकण्ठपाशः ।
शीर्षे पतद्भूर्यशनिर्हिसाक्षात् प्राणान्तहेतुः प्रबला धनाशा ॥

வீட்டின் ஆசையென்பது காலுக்குப்போட்ட விலங்கென்றும், பத்னீ புத்திரர்களின் ஆசையே கழுத்தைச் சுறுக்கிட்ட கயிறென்றும் பணத்திலாசையென்பது பிராணனை போக்கக்கூடியதற்கு காரணமான தலையில்விழும் இடியென்றும் நினைத்து அவ்வாசைகளை ஒழிக்கவேண்டும். இவ்விதம் இவ்வுலக விஷயங்களில் தோஷத்தைக் கெவனிப்பதுபோல் சுவர்க்கலோக போகத்திலும் தோஷங்களை விசாரித்துத் தள்ளவேண்டும். அவ்வந்தலோகத்தின் போகத்தை அடையவிரும்பி அதற்குரிய புண்யங்களைச் செய்து அவ்வந்த லோகத்தை அடைந்தும் அந்தபுண்யம் குறைந்தவுடன் தேவர்களால் தள்ளிவிடப்பட்டு அங்கங்கள் முறிந்து ஒடிந்துபோய் நக்ஷத்திர ரூபமாக ஆகாயத்திலிருந்து கீழே விழுகிறதைப் பார்த்தால் ஸ்வர்க்காதிலோகங்களில் எப்படி ஆசையுண்டாகும். இந்த அர்த்தத்தையே ஒரு சுலோகத்தினால் கூறுகிறார்.

पुण्यक्षये पुण्यकृतो नभस्थैर्निपात्यमानान् शिथिली कृताङ्गान् ।
नक्षत्ररूपेण दिवश्च्युतांस्तान् विचार्य कोवा विरतिन्न याति ॥

தவிர இந்திரன் முதலான தேவர்களின் பதவி கிடைத்தாலும் அதிலும் பெருத்த துன்பங்களுண்டாவதைக்கவனித்தாலும் அந்த உலகத்தின் போகமும் வேண்டாமென்று நினைப்பது அவசியமாயிருக்கிறது. இது விஷயத்தையும் நமது ஆசார்யாள் கூறியுள்ளார்.

वाय्वर्कवह्नीन्द्रमुखान्सुरेन्द्रान् ईशो भियाकम्पितान्तरङ्गान् ।
विपक्षलोकैः परिदूयमानान् विचार्य को वा विरतिं न याति ॥

வாயு சூரியன் அக்னி இந்திரன் முதலிய தேவசிரேஷ்டர்கள் ஈசுவரனுடைய ஆக்ஞைக்கு பயந்து நடுக்கமெடுத்த மனதை உடையவர்களாகவும் சத்துருக்களான அசுரர்களால் வருத்தப்பட்டு தவிக்கின்றவர்களான அந்த தேவர்களைப்பற்றி விசாரிப்பவன் ஏன் வைராக்கியத்தை அடையமாட்டான்? என்றபடி இவ்வுலகத்தில் ஸம்ஸாரபந்தத்தினால் படும் துயரங்களைப் போலவே மேலுலகத்திலும் கஷ்டங்கள் அநேகமேற்படுகிறபடியால் இந்த கைய விஷயபோகங்கள் வேண்டாமென நிச்சயம் செய்துகொண்டு வைராக்கியமடைந்தவனுக்கு மோக்ஷமென்பது காஸ்தமாயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. இது விஷயமாக ஸ்ரீ ஹரிதுரௌணிகர் என்ற ஒரு மஹாப்பிராமணருடைய சரித்திரத்தை திருஷ்டாந்தமாக எழுதுகிறேன்.

முத்கலரென்றவொரு பிரம்மணோத்தமர் மனைவி மைந்தன் நாட்டுப்பெண் இவர்களுடன் ஓர் அரண்யத்தில் பர்ணசாலை போட்டுக்கொண்டு வசித்துவந்தார். அவர் ஒவ்வொருநாளும் அரண்யத்தில் தானகவே பழுத்து கீழே உதிர்ந்திருக்கும் தானியங்களை ஒவ்வொன்றாய் பொருக்கி நாலு மாக்கால் தானியம் சேர்த்துக்கொண்டு வீட்டுக்குவந்து அதைக்குத்தி அரிசியாகச் செய்து அதைச்சமைத்து தேவர்கள் பிதிருக்கள் அதிதிகள்ப்ருத்தியர்கள் இவர்களுக்காக பாகமிட்டுமற்றபாகத்தை தனக்கும் மனையாளுக்கும் மைந்தனுக்கும் நாட்டுப்பெண்ணுக்கும் பாகமிட்டு போஜனம் செய்வார். அப்படியே பருவங்களில் செய்யவேண்டிய யாகங்களையும் சிரத்தையுடன் செய்வார். அப்பொழுது இந்திரன் முதலான தேவர்கள் நோாகவந்து ஹவிர்பாகங்களைவாங்கிக்கொள்வார்கள். இப்படிக்கு தனது வர்ணாசிரமங்களுக்குரியதான கருமங்களை எவ்விதமான பலன்களிலும் விருப்பமில்லாதவராக செய்துவந்ததைக்கேட்ட துர்வாஸமகருஷி ஓர் சமயம் பித்தங்கொண்டவன்போல் தலையை

விரித்துக்கொண்டு அவதூதராயும் அதிகபசியுடன் முக்கலருடைய ஆசிரமத்துக்கு வந்தார். அவர் வந்தவுடன் அவருக்கு பாத்தியம் அர்க்கியம் மதுபர்க்கம்முதலியவைகளைக்கொடுத்துஉபசரித்து போஜனத்துக்கு அழைத்தார். அதிதிக்கென்று ஏற்படுத்திய பாகத்தை முதலில் கொண்டுவந்து கொடுத்தார் அதை புஜித்து திருப்தியடையாதவராக திரும்பவும் பசிதீரும்படி அன்னம் கொடுமென்று கேட்டதும் தங்களுடைய எல்லா பாகங்களையும் கொடுத்து அவரைத் திருப்தி செய்துவைத்தார். முக்கலர் தன் பத்நீ புத்ரர்களுடன் அன்று உபவாஸமாக இருந்துவிட்டு மறுதினம் நாலுமாக்கால் தானியம் பொறுக்கிக்கொண்டுவந்து அதை சமைத்து பாகமிடுந்தருணத்தில் திரும்பவும் துர்வாஸ முனிவர் வந்து புசித்துச்சென்றார். (தொடரும்) கச்சபேச்வரசாஸ்திரிகள்.

# வார விருத்தாந்தம்.

ஸாத்விகபக்தியே சிறந்தது:— பழனிமாரியம்மன்கோவில் உத்ஸவத்தில் ஓர் பக்தர் அக்னிகுண்டத்தைக்கையிலேந்தி மேளதாளத்திற் கேற்றப்படி நடனம் புரிந்தாராம். அக்னிபகவான் பந்தல் மீதேறி நடனமாடி மூவரை உயிருடன் பலிகொண்டார். இது விசாரணை நடந்து இனி இவ்வுத்ஸவம் நடவாமல் அரசாங்க உத்திரவு பிறக்கும், நாஸ்திகருக்கு இது ஓர் விருந்தாகும். பலர் ஆடல் பாடலுடன் ஆவேசம் வந்ததாக இதுபோன்ற செயல்களைச் செய்கின்றனர். ஏகாந்தமாக நின்று மனமுருக கண்ணீர்பெருக உலகவாஸனையற எம்பிரானை உபாஸித்தல் நலம்.

கலி விலாஸம்:— ஐயாயிரமாண்டுகளுக்குமேல் கலியில் தர்மம் மறைந்து அதர்மம் அதிகரிக்குமென புராணங் கூறுகிறது. கண்கூடாக அதையும் காண்கிறோம். உலகத்தின் பௌதிக நன்மைக்கா உடல் பொருளைத் தியாகம் செய்யும் ஸ்ரீ யுத காந்தியின் மனப்போக்கும்மதவிஷயத்தில் முற்றிலும் விரோதமாயிருக்கிறது. புருஷர்கள் தேச கைங்கரியத்திலீடுபடாவிடில் அவர்களுக்கு பாகம் செய்து போடாதீரென டில்லியில் பெண்களுக்கு உபதேசிக்கிறார். உலகமறிந்து தாராளசித்தம் சாந்திதாந்தியுமுள்ள காந்தியே இப்படி ஆரம்பித்தால் சென்னையில் மாதர்ஸபையார் ஜாதிமதத்தை ஒழிக்கவேண்டுமெனப் பேசுவது ஆச்சரியமல்ல. இதெல்லாம்

கலிவிலாஸமே. ஹம்ஸம்போல குற்றத்தையகற்றி குணத்தைக் கொள்ளுதலே நலம்.

என்ன உபசாரம்? நாகரீகத்தொத்துநோயில் உபசாரம் என்பதொன்று. உத்தியோகத்திலிருந்து போவருக்கு உபசாரம், வருபவருக்குபசாரம், புதுபுது மந்திரி கவர்னர் வைச்ராய் தேசியத்தலைவர்களுக்குபசாரம், அர்த்தமில்லாமல் வீணுக ஏழைபணத்தை இதிலுமா செலவழிக்கவேண்டும்? அன்னவர் அபிவிருத்தியைக்கோரி ஆலயத்தில் அபிஷேகாதிகள் செய்யலாகாதோ?

நரஸ்துதி தகாது. தேசநிமித்தமோ அல்லது அதிகாரத்திலோ பெரியாரகமதிக்கும் ஒருவரைப்போற்ற நம்மவர் எல்லையில்லாமல் செல்கின்றனர். குருவைத்தவிர மற்ற நாரைத்துதிக்காதே என தர்மநூல் கூற்று. ஒரு பெரியாரின் படத்தை பகவானது ரதத்தில் வைப்பதும் தேங்காயுடைத்து தீபாராதனை செய்வதும் அதிகமாம். அதிஸர்வத்ர வர்ஜயேத் என்பதை மறக்கலாகாது.

பணம் பல செய்யும். லக்ஷ்மீகடாக்ஷமான தனத்தை நல்வழியில் பயன்படுத்துவோர் தார்மிகர். குழந்தையுள்ள தாய்மார்கள் குழந்தைகளைவிட்டு தேசவேலை செய்யவந்தால் ஆயாளைக்கொண்டு குழந்தையைக்காக்க தனம் தருவதாக ஓர் த்விஜஸீமாட்டி சொல்கிறுள். தக்கவரிடத்திலுள்ள தனமே மேலானது. ஆகலால்தான் குழந்தைகள் பெண்கள் இவர்களிடம் தனம் கூடாதென ஸ்மிருதி சொல்கிறது.

இதுவும் தீதே. பிரபுல்லசந்த்ரராய் என்ற வங்கநாட்டு வித்வான் மதுரையில் தேசியஉபந்யாஸம் செய்யும்போது சீமைசுருட்டைக்குடிக்காதீர்கள், நம் நாட்டுச்சுருட்டையே உபயோகியுங்கள் என்றுர். புகையிலை பொடியாகவும் சுருட்டாகவும் நேராகவும் பலருடலில் புகுந்து தேஹாரோக்யத்தைக் கெடுக்கிறதென வைத்யர் கூறுகின்றனர். தாமஸபதார்த்தமான இது மனதையுங் கெடுக்கிறது. அடியோடு இதை அகற்றவேண்டும். எரியுங்கொள்ளியில் எந்தக்கொள்ளி நல்ல கொள்ளி?

அவனே பிராமணன். யாதாமொன்றுல் உடலை மறைத்து ஏதாவதொன்றுல் பசியையகற்றி எங்கேயாவது படுத்துறங்குபவனே பிராமணனென தேவர்கள் நினைக்கிறுர்கள். உயர்ந்த உடை நிறைந்த உணவு சுகமான சயநம் இவைகளையே தேடிச்செல்லலாகாது. கிடைத்த ஸ்வல்ப்பத்தைக்கொண்டு இந்த வியவஹா

ரங்களை நடத்தி பிறவிப்பயனைத் தேடவேண்டுமென்பது இதன் பொருள். இங்ஙனமில்லாது "ஒவ்வொன்றிலும் அன்ய நாட்டுச் சேர்க்கையால் அங்குள்ள அநாசாரத்தையும் இந்நாட்டிலுள்ள துராசாரத்தையுமே கைக்கொண்டோம்" என டில்லி சட்ட சபையில் ஸ்ரீமான் ரங்காசாரியார் சொன்னார். இது முற்றிலும் உண்மை. ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் சென்னைக்கடுத்த ஆலந்தூரில் இதேவிஷயமாகச் செய்த உபதேசம் பலருள்ளத்தில் பதிந்துளது. அநுஷ்டித்தாலன்றோ பயன்பெறலாம். இம்மைமாத்திரமின்றி மறுமைப்பயனையுமளிக்கவல்லது ஸாத்விக வாழ்க்கை.

பொருமையும் ஸாமர்த்தியமும் வேண்டும். 11௳ ஆமதாபாத்தில் ஸ்ரீயுதகாந்தி பேசும்போது கூட்டத்தில் நெரிபட்டு ஓர் பெண்மணி இறந்தாள். கர்ப்பிணி ஒருவள் மூர்ச்சித்து ஆஸ்பத்திரியில் காயம்பட்ட பல மாதருடனிருக்கிறாள். பொதுவாக நம்மவருக்கும் பொருமையிருப்பதில்லை. இதையறிந்து தலைவரும் ஸாமர்த்யமாக நடப்பதில்லை. நமது ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாள் பல்லாயிரக்கணக்கான கூட்டத்திற்கு தர்சநமளித்து அநுக்ரஹம்செய்யும் ஸம்விதானம் மற்றெங்கும் காண்பதரிது.

காரம் போகவில்லை:— சென்னை சட்டசபையில் சென்ற வாரம் ஒருவர் பழங்குப்பையைக்கிளறி சாரதா சட்டத்திற்காக என்ன முயற்சி செய்தீரென அரசாங்கத்தைக் கேட்டார். நடந்த ஒரே கேஸில் இருவருக்கு 20 ரூ. அபராதம் விதிக்கப் பட்டது. அரசாங்கமே நேராக இதில் தலையிடாதென பதில் வந்தது. கடுகு சிறுத்தும் காரம் போகவில்லை. அடியோடிதை ஒழித்தாலல்லது கதியில்லை.

பாராட்ட வேண்டியதுதான்:— கோர் கொண்டுவந்த கலப்பு விவாஹ சட்டத்தை எதிர்த்த அரசாங்க அங்கத்தினரான ஸர். பி. எல். மித்தர் என்ற மித்ரரை மீரத் வர்ணாச்ரமஸபை ஸூரத் சுக்ல ஸபை அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கங்கள் ஷெ விஷயமாகப் பாராட்டி தந்தியனுப்பின. இந்தஸமயம் அவர் மித்ரரே. எப்போதும் தர்மத்தில் சட்டம் தலையிடாதபடி செய்தால் என்றும் பாராட்டுவோம்.

ஓர் களங்கம்:— பல லக்ஷதனம் சேர்த்து காசியில் ஸர்வ கலாசாலை நடத்தி வைதிக முறையில் வேத சாஸ்திரங்களைக் கற்

பித்து பல வருஷங்களாக தேச மத ஸேவைசெய்யும் பண்டித மாளவ்யாவை பாரதநாடு மறக்காது. கல்வியும் அதற்கேற்ற அவர் ஆசாரமும் மேலானதே. சிறையிலும் ஸ்வயம்பாக நியமம் தவராத அநுஷ்டான சீலன் தீண்டாதாருடன் கலக்க வேண்டு மெனும் களங்கமொன்று அவரை ஆட்டிவருகிறது. தனது கலா சாலையில் மாணவர்களுக்கு பக்தி புகட்ட ஓர் விச்வேச்வராலயம் கட்டுகிறார். 11வ ஸ்வாமிதபோநிதி என்பவரைக் கொண்டு அஸ்தி வாரக்கல் நாட்டும்போது இதில் பஞ்சமரும் நுழையவேண்டும் என தனது எண்ணத்தை வெளியிட்டார்.

நாடகப் பேய்:— நாடகத்தைப் பார்க்க வேண்டுமென்ற பேய் முற்றி ஆடவேண்டுமென்ற பிரும்ம ராக்ஷஸனாக மாறியது. வக்கீலாட்டம் உத்யோகஸ்தராட்டம் ஸ்கூல் ஆட்டம் ஜீவனத் திற்கு ஆட்டம் இப்படி எங்கும் ஆட்டம் பலத்து விட்டது. உலகமே ஓர் நாடகமென்றார் ஓர் கவி. பெரியோராடுவது போதா தென குலச்சிறுமிகளை சிறுவர்களுடன் வேஷம் போட்டு ஆட்டி வைக்கின்றனர். இது பின்னர் எவ்வளவு கெடுதலென கவனி யாது பெற்றோர் மற்றோருடன் சேர்ந்து ஸந்தோஷிக்கின்றனர். இப்பேய் கேவலஸம்ஸ்கிருதகலாசாலையிலும் புகுந்தது. சென்னை யில் ஸம்ஸ்கிருத விருத்திக்காக உழைப்பதாகச் சொல்லும் ஓர் சபை வயதான குலஸ்திரீகளையும் அன்ய புருஷர்களையும் சேர்த்து ஸம்ஸ்கிருத நாடகம் நடித்தது. இப்பேய் என்றுவிடும்?

இது நல்லவழி:— அத்வைதம் அவைதிகமென மார்தட்டி போருக்கழைத்த ஸ்ரீயுத உத்ராதிமடஸ்வாமிகள் தலைமைவஹித்து திருமதஸ்தபண்டிதர்களும் பேச சாரதாசட்டத்தைத் கண்டித்து 11வ வைச்ராயிக்கு தந்திகொடுத்தார். மூவரும் சேர்ந்து செய்ய வேண்டியதை இப்போதாவது கவனித்தஸ்வாமிகளுக்குவந்தனம்.

மறுபடியும்தோல்லை:— அம்பீத்கார் என்பவர் 5000 தீண் டாதாரை நாஸிக்கோவிலில் பிரவேசிக்க முயற்சிக்கிறார்.

சுகத்தைவிரும்பி முதலேயிழந்தாள் சித்தூரைச் சார்ந்த ஓர் பெண்பர்த்தாவின் வச்யமார்க்கத்தைக்கருதி குருவிக்காரியினிடம் மருந்தைவாங்கி உணவுடன் கலந்து கொடுத்தாள். கணவனிறந் தான். அவளும் முதலில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு ஆயு ளளவும் தீவாந்தரசிக்ஷை பெற்றாள். பெண்கள் எச்சரிக்கையா யிருக்கவேண்டும்.

ஸ்ரீவத்ஸ வெ சோமதேவ சர்மா.